



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.3.2025) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதி மற்றும் டெமேனோஸ் மென்பொருள் நிறுவனத்தின் சமூக பங்களிப்பு நிதியுடன், தமிழ்நாடு வீல்சேர் கூடைப்பந்து சங்கத்தைச் சேர்ந்த 17 வீல் சேர் கூடைப்பந்து விளையாட்டு வீராங்கனைகளுக்கு ரூ.18.82 லட்சம் மதிப்பிலான சக்கர நாற்காலிகளாகவும், தேவைப்படும்போது பேட்டரியால் இயங்கும் ஸ்கூட்டராகவும் மாற்றத்தக்க வகையிலான மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேக மூன்று சக்கர பேட்டரி ஸ்கூட்டர்களை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, டெமெனோஸ் நிறுவனத்தின் மண்டல தலைவர் கணேசன் ஸ்ரீராமன் மற்றும் டெமெனோஸ் நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு தலைவர் கிடியன் ஆகியோர் உடனிருந்தனர்.

### மாநில உரிமைகளுக்காக பாடுபட்ட முத்தமிழறிஞர் கலைஞர் வழியில்

# தேசிய அளவில் தேர்ந்த அரசியல்வாதியாக செயல்படுகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு பாராட்டு!

**சென்னை, மார்ச். 22-**

**மாநில உரிமைகளுக்காக முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் மிகத் தேர்ந்த அரசியல்வாதியாக தேசிய அளவில் எதிர்க்கட்சிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒருங்கிணைத்து வருவதாக ‘தி டைம்ஸ் ஆஃப் இந்தியா’ நாளேடு பாராட்டியுள்ளது.**

தி டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேடு வெளியிட்ட கட்டுரையில் குறிப்பிட்டுள்ளதாவது:-



THE PAST IN THE PAST

STALIN IS NOW ALL-IN

*He has cast himself as hero of southern resistance against delimitation & NEP for a bigger reason: like dad Karunanidhi, he wants to be opposition frontman nationally*

All those invited to his Chennai summit have a common cause. If top leaders do turn up, Stalin would've made a statement

தொகுதி மறுவரையறை விவகாரத்தில் ஒன்றிய அரசுக்கு எதிராக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னெடுப்பில் சென்னையில் நாளை (22.3.2025) நடக்கும் கூட்டுக்குழு கூட்டம் என்பது, மாநில சுயாட்சியை நிலைநாட்டுவதில் கலைஞர் படைத்த வரலாற்று நிகழ்வை மீண்டும் நினைப்படுத்துவதாக அமைந்துள்ளது.

கலைஞர் எப்படி தேசிய அரசியலில் முக்கிய பங்காற்றினாரோ, அரசியல் தலைவர்களை ஒருங்கிணைப்பதில் முன்னோடியாக திகழ்ந்தாரோ, அதே வழியில் தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் பயணிக்கிறார். 1960களில் இந்திரா காந்தி, ஷேக் அப்துல்லா முதல் என்.டி.ராமாரா ராவ், தேவகவுடா வரை பல்வேறு விவகாரங்களில் கலைஞர் பேச்சுவார்த்தை நடத்தியவர். மாநில சுயாட்சியை கட்டமைப்பதில் கலைஞர் ஒரு முன்னோடி.

அவர் 1969ல் முதலமைச்சரான போது, ஒன்றிய மாநில அரசுகள் இடையிலான உறவுகள், அதிகாரப் பகிர்வு, கூட்டாட்சித் தத்துவம் குறித்து ஆராய ராஜமன்னார் குழுவை அமைத்தவர். 1974ல் ராஜமன்னார் குழு அறிக்கை தமிழ்நாட்டு சட்டப்பேரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்பிறகு, 8 ஆண்டுகள் கழித்து, தமிழ்நாடு அரசின் அறிக்கையை மேற்கோள் காட்டி அப்போதைய கர்நாடக முதலமைச்சர் ராமகிருஷ்ணா ஹெக்டே தென்மாநில முதலமைச்சர்கள் கூட்டத்தை கூட்டினார்.

மண்டல் ஆணைய பரிந்துரையில், கலைஞரின் ஆதரவை அப்போதைய பிரதமர் வி.பி.சிங் நாடியதையும், தேவகவுடா, ஐ.கே.குஜ்ரால் ஆகியோர் பிரதமர்களாக வருவதில் தேசிய அரசியலில் கலைஞரின் பங்கு அளப்பரியது. கலைஞர் நிகழ்த்திய வரலாற்று நிகழ்வுகளை பல ஆண்டுகளுக்குப்பிறகு தற்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீண்டும் நிகழ்த்தி வருகிறார்.

தொகுதி மறுவரையறை விவகாரத்தில் பல்வேறு மாநில முதலமைச்சர்கள், அரசியல் தலைவர்களை ஒருங்கிணைத்து, சென்னையில் நடக்கும் கூட்டுக்குழு கூட்டம் தேசிய அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது. மக்கள்தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்யப்பட்டால் வடமாநிலங்களில் தொகுதிகள் எண்ணிக்கை மிகப்பெரிய அளவில் அதிகரிக்கும் என்பதுடன், தென்மாநில பிரதிநிதிகள் எண்ணிக்கை வெகுவாக குறையும் என்பதை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கியுள்ளார்.

தேசிய கல்விக் கொள்கை மூலம் இந்தி திணிப்பதாக தெரிவித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பாஜகவின் கொள்கைகளை எதிர்ப்பதிலும் தெளிவான செயல்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார். தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியை தொடர்ந்து வலிமையுடன் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழிநடத்தி வருகிறார்.

இவ்வாறு ‘தி டைம்ஸ் ஆஃப் இந்தியா’ நாளோடு வெளியிட்ட கட்டுரையில் தெரிவித்துள்ளது.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

# நீண்ட கால சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறது!

## ‘தி பிரிண்ட்’ இணையதள செய்தியையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, மார்ச் 22-

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் நீண்டகால சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறது என்று ‘தி பிரிண்ட்’ இணையதள செய்தியையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுவதால் மாணவர்கள் அடையும் பயன்கள் குறித்து ‘தி பிரிண்ட்’ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள செய்தியையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**ஆழ்ந்த திட்டமிடல் என்பது உடனடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதோடு நிற்பதில்லை. நாம் நினைத்துப் பார்க்காத வழிகளில் சமூக மாற்றத்துக்கே வித்திடுகின்றன.**

**பள்ளி மாணவர்கள் மருத்துவமனைகளுக்குச் செல்வதையும், தீவிர உடல்நலக்குறைபாடுகளையும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் பெருமளவில் குறைத்துள்ளதோடு; வகுப்பில் கவனம், நினைவாற்றல், கற்றல் வெளிப்பாடுகளை மேம்படுத்தியுள்ளது ஆய்வு முடிவுகளில் தெரிய வந்துள்ளது.**

**இவ்வாறு நல்ல ஊட்டச்சத்தைப் பெறும் குழந்தை பள்ளியில் சிறப்பாகப் படித்து, அது நீண்டகால சமூக முன்னேற்றத்துக்கு வழிவகுக்கிறது.**

**தமிழ்நாடு பெண்களுக்குக் கல்வியின் மூலம் அதிகாரமளித்து, அதனால் பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்தி, பாலின இடைவெளியையும் குறைத்துச் சாதித்த மாநிலம். அதே தொலைநோக்கு அணுகுமுறையைத் தொடரும் வகையில் குறிப்பிடத்தகுந்த எதிர்பார்ப்புகளை விஞ்சும் பயன்களைத் தரும் நேர்த்தியான நலத்திட்டங்களை நமது திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.


